மாண்புமிகு திரு. என். இராசாங்கம் : ஹரிஜன நலத்துறைப் பள்ளிகளில் வேலை செய்கிறவர்களைப் பற்றிய கேள்வி இது. பொதுக் கேள்விக்குத் தனியாகக் கேள்வி போட்டால் கல்வித் துறையிலிருந்து விடைபெற முடியும்.

சோத்துப்பாக்கம் அரிசனக் குடியிருப்பில் நீர்த் தேக்கத் தொட்டி

* *185 வினா*—**திரு. வை. பாலசுந்தரம் :** மாண்புமிகு அரிசனநல அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப் பாரா—

செங்கற்பட்டு மாவட்டம், அச்சிறுபாக்கம் தொகுதியில் சோத்துப்பாக்கம் அரிசனக் காலனியில் அரிசன நல இலாகாவின் மூலம் நீர்த்தேக்கத் தொட்டி அமைக்கும் குறிப்பு ஏதேனும் அரசின் பரிசிலனையில் உள்ளதா ?

மாண்புமிகு திரு. என். இராசாங்கம் : செங்கற்பட்டு மாவட்டம் அச்சிறுபாக்கம் தொகுதியில் சோத்துப்பாக்கம் அரிசனக் காலனியில் ஏற்கனவே உள்ள தரைமட்ட நீர்த் தேக்கத் தொட்டி உபயோகத்திற்கு லாயக்கற்றதாய் இருப்பதால் அங்கே தானே இயங்கும் நீர் அழுத்தத் தொட்டி கட்ட மாவட்ட ஆட்சித் தலைவர் தேவையான நடவடிக்கை எடுத்து வருகிறார்.

திரு. வை. பாலசுந்தரம் : தலைவரவர்களே, அச்சிறுபாக்கத் திலுள்ள சோத்துப்பாக்கத்தில் 5 ஆண்டுகளுக்கு முன்னாலே கட்டப்பட்ட நீர்த்தொட்டி பராமரிப்பு இல்லாத காரணத்தால் உபயோகமற்றது என்று தள்ளப்பட்டு இருக்கிறது. அதேபோல் என்னுடைய தொகுதியில் ஊனமலை, சூணம்பேடு போன்ற இடங் களிலும் இப்படிப்பட்ட நிலை இருக்கிறது. மேலும், தமிழ்நாடு பூராவிலும் இப்படிப்பட்ட சூழ்நிலை இருப்பதால், அப்படிப்பட்ட நீர்த்தொட்டிகளை சரியான வகையில் பராமரிக்க அரசு முன் வருமா ?

மாண்புமிகு திரு. என். இராசாங்கம் : தலைவரவர்களே, கேள்வி அச்சிறுபாக்கத்திலுள்ள சோத்துப்பாக்கம் அரிசனக் காலனியில் உள்ள நீர்த்தேக்க தொட்டியைப் பற்றியதாகும். பல காலனிகளைப் பற்றிக் கேட்டால் அதற்கான விடை இருக்காது. தனிக் கேள்வி போட்டால் விடை கொடுக்கலாம்.

1975 நவம்பர் 4]

திரு. பெ. சௌந்தரபாண்டியன் : தலைவரவர்களே, சோத்துப் பாக்கம் கிராமத்தில் ஏற்கனவே கட்டப்பட்ட தரைமட்ட, நீர்த் தேக்கத் தொட்டி வீணாகப் போனதற்கு என்ன காரணம்?

மாண்புமிகு திரு. என். இராசாங்கம் : தண்ணீர் இல்லை, அவ்வளவு தான்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு :ஓர் உரையின் தொடக்கத்தில் வெள்ளிக்குறி (*) இடப்பட்டிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

2. கவன ஈர்ப்பு

குமரி மாவட்டத்தில் ஏற்பட்டுள்ள கடலரிப்பு குறித்து

THIRU N. DENNIS : Sir, I call the attention of the Hon Minister for Public Works to a matter of urgent public importance, namely, the sea erosion during June 1975 at Enayam, Puthenthurai, Ramanthurai, etc., in Kanyakumari district resulting in loss of properties.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : பேரவைத் தலைவர் அவர்களே, 24—5—1975 ஆம் நாளன்று கன்னியாகுமரி மாவட்டக் கடற்கரையோரங்களில் கடல் கொந்தளிப்பும், அலை ஏற்றமும் ஏற்பட்டதன் காரணமாக, பெருமளவில் கடலரிப்பு ஏற்பட்டு, கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள பின்வரும் 3 கிராமங்களில் 13 குடிசைகளுக்குச் சேதம் விளைந்தது :

(1) முள்ளூர் துறை	6 குடிசைகள்
(2) இராமன்துறை	4 குடிசைகள்
(3) இணையம்	3 குடிசைகள்
மொத்தம்	13 குடிசைகள்